செய்தி வெளியீடு எண்: 393 நாள்: 27.02.2024

## செய்தி வெளியீடு

### வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் ரூ.12.27 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (27.02.2024) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 12 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 கோட்டாட்சியர் குடியிருப்புகள், 1 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், 1 வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, 4 வட்டாட்சியர் குடியிருப்புகள், 13 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள், 1 கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் ஆகிய கட்டடங்களை திறந்து வைத்தார்.

வருவாய்த்துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில் 3 கோடியே 6 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்; நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் 3 கோடியே 44 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு;

நாகப்பட்டினம் மாவட்டம் – வேதாரண்யம், தென்காசி மாவட்டம்– சங்கரன்கோவில் ஆகிய இடங்களில் 1 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோட்டாட்சியர் குடியிருப்புகள்;

புதுக்கோட்டை மாவட்டம் – அறந்தாங்கி, மயிலாடுதுறை மாவட்டம்– குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி, திருவள்ளூர் மாவட்டம்– கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் 1 கோடியே 44 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வட்டாட்சியர் குடியிருப்புகள்;

செங்கல்பட்டு மாவட்டம் – சித்தாமுர், லத்தூர் மற்றும் பம்மல், இராமநாதபுரம் மாவட்டம் – இராமநாதபுரம், தேரிருவேலி மற்றும் காக்கூர் திருவள்ளூர் மாவட்டம் – நேமம், வானகரம் மற்றும் வயலாநல்லூர் திருவாரூர் மாவட்டம் – ஆவூர் மற்றும் கமலாபுரம், விழுப்புரம் மாவட்டம்– நெமிலி, திருவண்ணாமலை மாவட்டம் – பெருங்காட்டூர் ஆகிய இடங்களில் 2 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 13 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள்;

தென்காசி மாவட்டம் – புன்னைவனத்தில் 15 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1 கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 12 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வருவாய்த் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., சமூக பாதுகாப்பு திட்டம் (மு.கூ.பொ), ஆணையர், திரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப., வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் டாக்டர் எஸ். நடராஜன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி சுபா நந்தினி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in